பக்கங்கள்:-15

காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 18 | திங்கட்கிழமை | 04.11.2024 | அதிர்வு 94 |
|---|---|---|---|---|---|

## நவம்பர் 14 ஆம் திகதி தேர்தல் நடைபெறுமா?

### உயர்நீதிமன்றில் இன்று விசாரணை

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பது தொடர்பான வழக்கு விசாரணையை இன்று உயர்நீதிமன்றம் முன்னெடுக்கவுள்ளது.

05▶



# தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள அதிகரிப்பு

## நுவரெலியாவில் ஜனாதிபதி அநுர உறுதி

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

05▶

# வன்முறையற்ற தேர்தல் கலாசாரம் உருவாகின்றது

## கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் கலாசாரம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

கபே அமைப்பின் அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம் எனும் தொனிப்பொருளிலும், 18 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களுக்கான தெளிவூட்டும் நிகழ்வும் வவுனியாவில்

05▶






நேற்று நுவரெலியாவில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஒரு விடயத்தை அங்கு வெளிப்படுத்தினார்.

பதவியிலிருந்த ஜனாதிபதியின் உணவு தேவைக்காக நுவரெலியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இருந்து அங்கு உற்பத்தியான சேதன மரக்கறி வகைகள் கொழும்புக்கு கொண்டு வரப்படுகின்றன என்ற தவலையே அவர் கூறினார்.

சுமார் அறுபது கிலோ நிறையுடைய இரண்டு பொதிகளில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நுவரெலியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் விளைவிக்கப்பட்ட சேதன மரக்கறிகள் கொழும்புக்கு ஜனாதிபதி செயலகத்துக்கு வருவதை அறிந்து தாம் ஆச்சரியமடைந்தார் என அவர் கூறினார்.

அந்த மரக்கறிகளை இனிமேல் பாதுகாப்பு அதிகாரிகளின் தேவைக்கு பயன்படுத்தும்படி தான் உத்தரவிட்டிருக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

05▶



# 2024 ஆம் ஆண்டு இலங்கையின் திருப்புமுனையாக மாற்றம் பெறும்

## ஹறினி அமரசூரிய தெரிவிப்பு

2024 ஆம் ஆண்டு இலங்கையின் திருப்புமுனையாக மாறும் என பிரதமர் ஹறினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மத்துகமவில் நேற்று காலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கொள்கையுடைய சட்டத்தை மதிக்கின்றவர்களே தங்கள் கட்சியின் வேட்பாளர்களான போட்டியிடுகின்றனர் என பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அவர்கள் மக்களின் வளங்களை, பணத்தை திருடுவதில்லை எனவும் பொது வளங்களை வீண்விரயம் செய்வதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் சேவைக்கு தம்மை அர்ப்பணிக்க முடியுமானவர்களே வேட்பாளர்களாக உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

தங்களிடம் சிறந்த திட்டம் காணப்படுவதாகவும் அதனூடாக நாட்டு மக்களின் வாழ்க்கையை அழகாக மாற்றுவதற்கு தாங்கள் செயற்படுவதாகவும் பிரதமர் ஹறினி அமரசூரிய இதன்போது தெரிவித்துள்ளார்.




# அஸ்வெசும கொடுப்பனவு முறைகேடுகள் ஆராய்வதற்குப் பத்து பேர் குழு நியமனம்!

அஸ்வெசும கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கையின் போது அநீதி இழைக்கப்பட்ட நபர்களை கண்டறிவதற்கான முறையான விசாரணைகளை நடத்துவதற்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் பத்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும பலன்களை வழங்குவதில் உள்ள அசௌகரியங்கள், நியாயமற்ற செயன்முறை மற்றும் சாதாரண மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிவதே இந்தக் குழுவின் நோக்கம் ஆகும்.

சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊடக அமைச்சின் அறிக்கையின் படி, குழுவின் உத்தியோகபூர்வ உறுப்பினர்களில் சமூக சேவையாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் உள்ளனர்.

அஸ்வெசும கொடுப்பனவு வழங்கும் முறையை மேம்படுத்தல் பல்வேறு தரப்பினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சட்ட மற்றும் செயற்பாட்டு ஆலோசனைகளை வழங்குவதும் இந்தக் குழுவின் நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# அனுராதபுரத்தில் 6 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

அனுராதபுரம் – தலாவ பகுதியில் சுமார் 06 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிற்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது 06 கிலோ 150 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தசம்பவம்தொடர்பில்நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த 37 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



# வேலவன் திருவருள் விரைந்துமே கிடைக்கும்!

**( கந்தசஷ்டி 3 ஆம் நாள் )**

கந்தன் என்றால் கவலைகள் அகலும்
காரியம் சிறக்கும் களிப்பும் பெருகும்
வெந்திடு உள்ளம் விடிவினைக் காணும்
கந்தன் கருணை களையும் அனைத்தையும்

கந்தனின் கைகளில் அமர்ந்திடும் வேலோ
கயமையை நோக்கியே குறியாய் இருக்கும்
வேதனை போக்கும் வெற்றியைக் கொடுக்கும்
வேலவன் வெற்றி வேலதே ஆகும்

வேலை வழிபடு வேதனை போகும்
வேலை நினைந்தால் வெற்றியே கிடைக்கும்
வேலை மனமதில் இருத்தியே வைத்திடு
வேலவன் திருவருள் விரைந்துமே கிடைக்கும்!

*மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,*
*மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,*
*மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.*



# நாட்டை ஆட்சி செய்ய அனுபவமிக்க குழு தெரிவு செய்யப்பட வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தற்போதைய அரசாங்கத்தில் அனுபவமுள்ள எவரும் இல்லாததன் காரணமாக, நாட்டை ஆட்சி செய்வதற்கு அனுபவமிக்க குழுவொன்று தெரிவு செய்யப்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இளைஞர் குழுவொன்றுடன் இடம்பெற்ற சிநேகபூர்வ சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அனைத்து மட்டத்திலும் அனுபவமிக்க அரசியல் தலைமைகள் உருவாக்கப்பட வேண்டும். தற்போதைய அரசு எங்கே செல்கிறது என்பது தெரியாதுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களிடத்திலேயே வாகனத்தை வழங்க வேண்டும். அரசாங்கத்துடன் நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முரண்படவில்லை.

ஆனால், அரசாங்கமே என்னுடன் முரண்படுகிறது. 40 கோடி ரூபா மதிப்பிலான முந்திரி, சீஸ் சாப்பிட்டதாகவும், 16 குடைகளைக் கொள்வனவு செய்ததாகவும் அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

என்மீது வழக்குத் தொடரப்போவதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். அதற்கு முன்னதாக அரச பணியாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்.” – என்றார்.

# புத்தகங்களை கொள்வனவு செய்ய கொடுப்பனவு வழங்கத் திட்டம்!



பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்குக் கொடுப்பனவு வழங்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் பேரணியில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்க தற்போதுள்ள அரசாங்கத்திடம் பணம் இருந்திருந்தால் அதனை ஒரே நேரத்தில் செய்திருக்க முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.






# ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் அலுவலகம் திறப்பு

(கி.வசந்தன்)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் தேர்தல் அலுவலகம் நேற்று ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தொழிலதிபர் நெல்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் ப.உதயராசா நாடாவை வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

ஜனநாயகத் தேசியக் கூட்டணி ப.உதயராசா தலைமையில் தபால் பெட்டி சின்னத்தில் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுகின்றது.

ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் தேர்தல் பரப்புரைகளை முன்னெடுக்கும் பொருட்டு குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது மேற்படி கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுமக்களுக்கு உற்பத்தியாகும் பொது மரக்கறி வகைகளைத் தமது தேவைக்கு பயன்படுத்த விரும்பாத வகையில் விசேட வசதிகளையும் வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகள், தேர்தல்களில் தாம் தோற்ற பின்னரும் அந்த வசதிகளையும் வாய்ப்புகளையும் தொடர்ந்து பெற எதிர்பார்க்கின்றார்கள் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

\+ \+ \+

கொழும்பில் இடம்பெற்ற பொது நிகழ்வு ஒன்றில் தம்மிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பொதுத் தேர்தலில் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாவிட்டால் துன்ஹிந்த – பதுளை வீதியில் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் தலை குப்புறக் கவிழ்ந்தமை போல நாடும் கவிழ நேரும் என்று எச்சரித்திருக்கின்றார்.

கடந்த 75 ஆண்டுகளாக நன்கு அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் மூலம் நிர்வகிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரம் தான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் அதல பாதாளத்தில் விழுந்து தலைகுப்புறக் கவிழ்ந்து போனது என்பதை அவர் மறந்து விட்டு பேசுகின்றார் என்று தான் தோன்றியது.

---

## தோட்டத் தொழிலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதித் தேர்தலின்போது தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றினார்கள். மே தினக் கூட்டத்துக்குக் கொட்டகலைக்கு வந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளம் வழங்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி கூறினார். ஆனால். இன்னமும் அந்தச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. அவர் வீட்டுக்கும் சென்றுவிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமானசம்பளஉயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம். அதேபோல் அடுத்த வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படும்.

மக்கள் எந்நாளும் அரச நிவாரணங்களை நம்பி வாழ முடியாது. மக்கள் சுயமாக எழுந்து நிற்கக்கூடிய வகையில் பொருளாதாரச் சூழ்நிலையை நாம் உருவாக்குவோம்." – என்றார்.

---

## வன்முறையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இருந்த தேர்தல் நிலவரத்தையும் தற்போது இருக்கின்ற நிலவரத்தையும் பார்க்கும்போது ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற ஒரு சமாதானமான தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் ஒரு கலாசாரம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கின்றோம்.

அதற்கு உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலைக் குறிப்பிடலாம். அதேபோல் இந்தப் பொதுத்தேர்தலிலும் இதுவரை பாரியளவிலான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் பதியப்படவில்லை.

சட்டவிரோத தேர்தல் பிரசாரம் தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைப்பதை அவதானிக்க முடிகின்றது. இதேவேளை, பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்கள் பெரும் பங்கை வழங்குகின்றது. இவற்றை நாம் கண்காணிக்கும்போது அபேட்சகர்களுக்கு எதிரான சேறு பூசக்கூடிய – இழிவுபடுத்தக்கூடிய போலிப் பிரசாரங்கள், நாளுக்கு நாள் அதிகரிப்பதனை அவதானிக்க முடிகின்றது.

எனவே, அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநித்துவப்படுத்தக் கூடிய வர்களை வரவழைத்து அமைதியான தேர்தலுக்காக ஒத்துழைப்போம் என்ற வகையில் சத்தியப்பிரமாணம் ஒன்றைப் பெறுகின்றோம்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் நிச்சயமாக அது வன்முறையற்ற தேர்தலாக இருக்க வேண்டும். வன்முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களும், ஆதரவாளர்களும் ஒன்றிணைய வேண்டும் எனக் கபே அமைப்பு கேட்டுக்கொள்கின்றது." – என்றார்.

---

## நவம்பர் 14ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசமைப்பில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்துக்கும் வாக்களிப்பு நடைபெற வேண்டிய தினத்துக்கும் இடையில் உள்ள காலம்பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலக் கணக்குக்கு ஒரு நாள் முன்னதாக இப்போது நாடாளுமன்றத் தேர்தல் திகதியிடப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டு அடிப்படை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு மீதான விசாரணை இன்று உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக தேர்தல்கள் ஆணைக்குழு தனது அவதானிப்பு அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்துக்குக் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளது. இதனைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க உறுதிப்படுத்தினார்.

இந்நிலையில், சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் தனது சமர்ப்பணத்தை இன்று செய்யவுள்ளார்.

முன்னதாக, எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அரசமைப்புக்கு எதிரானதென உத்தரவிடுமாறு கோரி சிவில் செயற்பாட்டாளரும் நாம் ஸ்ரீலங்கா தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளருமான எச்.எம்.பிரியந்த ஹேரத் கடந்த வாரம் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட அதன் அங்கத்தவர்கள் உட்பட்டோர் பெயரிடப்பட்டனர்.

நாடாளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு சட்டத்தின் 10 ஆவது விதந்துரைக்கமைய வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்வதற்காக ஒக்டோபர் 04 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 11 ஆம் திகதிவரையான காலப் பகுதி அறிவிக்கப்பட்டுள்ளதிகு என்று சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின்படி வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் முதல் ஐந்து வாரங்களுக்கு குறையாத, ஏழு வாரங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்குள் தேர்தலுக்கான திகதி குறிப்பிடப்பட வேண்டும் என்று கேட்டிருந்தார்.

அதன்படி, வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட இறுதித் தினமான ஒக்டோபர் 11ஆம் திகதி முதல் ஐந்து வார காலம் நவம்பர் 15ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அதேபோல் ஒக்டோபர் 11 முதல் ஏழு வார காலம் நவம்பர் 29ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

ஆனால், இப்போது அறிவிக்கப்பட்டுள்ள நவம்பர் 14ஆம் திகதி அந்த சட்ட எல்லைக்குள் இல்லை என்று மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளரை அறிவுறுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலனற்றுப் போனதால், மக்களின் இறைமையும் நாட்டின் அரசமைப்பும் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்று தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டமைக்கு எதிரான உரிய உத்தரவை பிறப்பிக்குமாறு நீதிமன்றில் மேலும் கோரியிருந்தார்.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை வாக்களிப்பைத் தீர்மானிப்பதற்குப் பதிலாக வழமை போன்று சனிக்கிழமையன்று 16ஆம் திகதிக்கு அதனை நடத்த ஒழுங்குபடுத்தி இருந்தால் அது அரசமைப்பு குறிப்பிட்ட கால அவகாசத்தை வழங்குவதாக இருந்திருக்கும் எனவும் அந்த மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நவம்பர் 15ஆம் திகதி பௌர்ணமி தினம் என்பதால் அரச விடுமுறை நாளாகும். ஆகையால் அடுத்த நாள் 16ஆம் திகதி தேர்தலை நடத்த இணக்கம் வரலாம் என்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறு உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக இணக்கம் ஏற்பட்டால் இரண்டு நாட்கள் தேர்தல் பிற்போடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.










# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரசாரக் கூட்டம் நேற்று வவுனியாவில்

(கி.வசந்தன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரச்சாரப் பொதுக் கூட்டம் வவுனியாவில் நேற்று மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

வவுனியா, குருமன்காடு கலைமகள் விளையாட்டு மைதானத்தில் இப் பொதுக்கூட்டம் கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பொதுச் சுடரினை மாவீரர் ஒருவரின் தாயரும் ஏற்றி வைத்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்றது. இதில் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் 9 வேட்பாளர்களையும் ஆதரித்து வவுனியாவிற்கான பொதுக் கூட்டமே இடம்பெற்றது.

இதில் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மழையையிம் பொருட்படுத்தாமல் அதிகமான பொதுமக்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.











# அஸ்வெசும திட்டத்தில் அநீதி இழைக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் அநீதி இழைக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு 10 பேரடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் விஜித்த ஹேரத்தின் ஆலோசனைக்கிணங்கவே இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடலின் போது ஏற்பட்ட சிக்கல் நிலையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை இழந்த சமுர்த்தி பயனாளர்கள் குறித்து இந்த 10 பேரடங்கிய குழு பரிசீலிக்கவுள்ளது.

# மட்டக்களப்பில் கருணா கட்சி வேட்பாளர் மீது பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் தாக்குதல்!

மட்டக்களப்பில் கருணா அம்மானின் கட்சி வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் மீது பிள்ளையான் கட்சியின் ஆதரவாளர்கள் எனக் கூறப்படுகின்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கருணா அம்மானின் கட்சி வேட்பாளர் ஒருவர் உட்பட 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மட்டு. ஜெயந்திபுரம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கருணா அம்மானின் கட்சி வேட்பாளர் முனிசாமி நாகேந்திரன் மற்றும் அவரது ஆதரவாளர் இருவர் உட்பட 3 பேர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஜெயந்திபுரம் பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரின் அலுவலகம் திருநாவற்குளத்தில் நேற்று திறப்பு

(கி.வசந்தன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அலுவலகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வேட்பாளர்களான க.துளசி மற்றும் க.யசோதினி ஆகியோரின் பிரசார நடவடிக்கைகளுக்காக குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது முன்னாள் போராளிகள், பொதுமக்கள், தமிழ்த் தேசியப் பற்றாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டதோடு வேட்பாளர்களான க.துளசி மற்றும் க.யசோதினி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்டவேண்டும்."

- அலெக்சான்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இலங்கையின் துரதிஷ்டம்

ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் சண்டிலிப்பாயில் நடைபெற்ற ஒரு பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

“ஊழல் ஒழிப்பிற்கும், இலஞ்ச ஒழிப்பிற்கும், நிர்வாக ஒழுங்குமுறைக்கும் ஆதரவளிப்பதை தென்னிலங்கை அரசியல் சமூகம் பார்த்துக்கொள்ளட்டும். தமிழர்களாகிய நாம் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் குரல்கொடுக்கக்கூடிய பிரதிநிதிகளைத் தேர்வு செய்வோம்” - என்று யதார்த்த நிலையை அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

“ஊழல், இலஞ்சம், நிர்வாக சீர்கேடுகள் போன்றவற்றிற்கு முழுமையான காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் கடந்த காலங்களில் ஆட்சி செய்த சிங்கள அரசாங்கங்களும் அவர்களின் நம்பிக்கைக்குரிய நிர்வாகிகளும்தான். தமிழ் மக்களுக்கு அரசாட்சியும் கிடையாது. நிர்வாகமும் கிடையாது. வடக்கு - கிழக்கிலுள்ள நிர்வாகங்களும் கொழும்பினாலேயே ஆட்டிப்படைக்கப்படுகின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டுமாக இருந்தால் தமிழ் மக்களின் கைகளில் அதிகாரங்கள் முழுமையாகக் கிடைக்கப்பெற வேண்டும். ஆனால், முன்னைய அரசாங்கங்களும் சரி, இப்பொழுது வந்திருப்பவர்களும் சரி, தமிழ் மக்களுக்கான அதிகாரங்களை வழங்குவதில் பின்நிற்கிறார்கள்.” - இப்படி சுரேஷ் க. பிரேமச்சந்திரன் சுட்டுகின்ற விடயம்தான் இங்கு உண்மையான நிலைமை.

தென்னிலங்கையின் பௌத்த - சிங்கள மக்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினைதான் பிரதான விவகாரம். அவர்களது வாய்களையும் வயிறுகளையும் வாட்டி வதைக்கும் பிரச்சினை அதுதான். அது மட்டும்தான். ஊழல், லஞ்சம், முறைகேடுகள், நிர்வாகச் சீர்கேடுகள், ஒழுங்கு முறையற்ற நடவடிக்கைகள் என்று பல்வேறு காரணங்களினால் நாட்டின் பொருளாதாரம்அதலபாதாளத்தில்விழுந்து கிடக்கின்றது என்பது உண்மையே. அவை அவர்களின் அடிவயிற்றைக் குடைகின்றன.

ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை அவை மட்டும்தான் அவர்களுக்குப் பிரச்சினை என்பதல்ல. அதற்கு முதல் அவர்களுடைய தேசிய இனப் பிரச்சினை இவை எல்லாவற்றையும் தாண்டிய பெரிய விவகாரமாக அவர்களின் வாழ்வியலையே - இருத்தலையே - கேள்விக்குறியாக்கி நிற்கிறது. அந்தப் பிரச்சினையில் இருந்து மீளாமல் பொதுவான பொருளாதாரப் பிரச்சினையை மாத்திரம் தமிழர்கள் தங்கள் சிக்கலாகப் பார்க்க முடியாது.

“இலங்கையின் பொருளாதாரம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால், தமிழ் மக்களுக்கான ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். எமக்கான ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படுகின்றபொழுது, புலம்பெயர் தமிழ் மக்களிடமிருந்து பல்லாயிரம் கோடி டொலர் முதலீடுகள் வருகின்றமையுடன் எமது அண்டை நாடான இந்தியா, குறிப்பாக தமிழகத் தொழிலதிபர்களும் கூட இங்கு முதலீடுகளை மேற்கொள்ள முன்வருவார்கள். அதன் மூலம் ஏற்படுகின்ற வடக்கு கிழக்கின் வளர்ச்சி என்பது ஒட்டுமொத்த இலங்கைக்கும் பாரிய நன்மைகளை ஏற்படுத்தும்.” - என்று சுரேஷ் க. பிரேமச்சந்திரன் குறிப்பிடுகின்றமைதான் உண்மை நிலைமை.

இதுதான் யதார்த்தச் சூழ்நிலை. ஆனால் இதனை தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகள்புரிந்துகொள்ளவோ,புரிந்து கொண்டாலும் அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு அதன்படி செயல்படவோ இணங்கப் போவதில்லை. இதுதான் இலங்கையின் துரதிஷ்டம்...!

# சீமான் உள்ளிட்ட தலைவர்களை இகழ்வாகப் பேச வேண்டாம்

## கட்சியினருக்கு விஜய் அறிவுறுத்தல்



சீமான் உள்ளிட்ட தலைவர்களை இகழ்ந்து பேச வேண்டாம் என்றும் அனைவருக்கும் கண்ணியத்துடன் பதிலளிக்க வேண்டும் எனவும் கட்சியினருக்கு த.வெ.க.. தலைவர் விஜய் அறிவுறுத்தியுள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த ஒக்டோபர் 27 ஆம் திகதி விக்கிரவாண்டியின் விசாலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாட்டை பிரம்மாண்டமாக நடத்தி முடித்த நிலையில், சென்னையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் அக்கட்சியின் செயற்குழு மற்றும் மாவட்ட நிர்வாகிகளுடன் அதன் தலைவர் விஜய் ஆலோசனை நடத்தினார். கூட்டத்தில் பொதுச்செயலாளர் என்.ஆனந்த், பொருளாளர் வெங்கட்ராமன், கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தாகிரா உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். இதில், கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்துதல், மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் 26 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில் விஜய் பேசிய விடயம் தொடர்பாக கட்சி நிர்வாகிகள் கூறுகையில்,

“கொள்கைகள், எதிர்கால திட்டங்கள் குறித்து மக்களிடம் தீவிர பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். கூட்டணி குறித்து பிறகு ஆலோசிப்போம். சீமான் உள்ளிட்ட தலைவர்களை இகழ்ந்து பேச வேண்டாம். குறிப்பாக அ.தி.மு.க. மீதான விமர்சனங்களை அறவே தவிர்க்க வேண்டும். த.வெ.க. மீதான விமர்சனங்களுக்கு சரியான ஆதாரத்துடன், கண்ணியத்தோடு உடனுக்குடன் பதிலளிக்க வேண்டும்.

யாருடைய சொந்த வாழ்க்கை குறித்தும் விமர்சிக்கக் கூடாது. அவதூறான வகையில் பதில் இருக்கக் கூடாது. பூத் கமிட்டியில் அதிகளவு பெண்களை இடம்பெறச் செய்ய வேண்டும். வாக்கு சேகரிப்பில் பெண்களின் பங்கு அதிகளவு இருக்க வேண்டும். கொடி ஏற்றவும், பொதுக்கூட்டம் நடத்தவும் காவல்துறை அனுமதி கிடைக்காவிட்டால் தலைமைக்கு தெரிவிக்கவும். டிசம்பர் 27ஆம் திகதிக்குப் பிறகு மாவட்ட வாரியாக சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கிறேன். 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்னதாக மீண்டும் பிரம்மாண்ட மாநாடு நடத்தப்படும். ” – என்றனர்.

# தொலைக்காட்சி நிறுவனம் தொடங்க விஜய் திட்டம்?



புதிதாக தொலைக்காட்சி நிறுவனம் தொடங்க நடிகரும், த.வெ.க. தலைவருமான விஜய் திட்டமிட்டு இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான விஜய், அரசியல் களத்தில் இறங்கியிருக்கிறார். அவரது முதல் அரசியல் மாநாடு ஒக்டோபர் 27 ஆம் திகதி நடைபெற்றது. இதில் விஜய் தனது பேச்சில் கொள்கைகள், அரசியல் எதிரிகள் என பல விஷயங்களைக் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சிகள் விஜய்யை கடுமையாக விமர்சித்து வருகிறார்கள்.

குறிப்பாக நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் விஜய்யின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்தார். இதற்கு விஜய் தரப்பில் இருந்து எந்தவொரு எதிர்வினையும் வெளியாகவில்லை. இதனிடையே, விஜய் கட்சியின் சார்பில் புதிதாக தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று தொடங்க முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. அதில் தனது கட்சி சார்ந்த செய்திகள், செயல்கள் என அனைத்தையும் ஒளிபரப்ப உள்ளார்கள்.

தமிழகத்தில் உள்ள கட்சிகளுக்கு தனியாக தொலைக் காட்சி நிறுவனங்கள் இருக்கின்றன. அதேபோல் விஜய்யும் தொடங்க முடிவு செய்துள்ளார் எனத் தெரிகிறது. ஆனால், தொலைக்காட்சி நிறுவனம் தொடங்குவது என்பது பெரிய விஷயம். இதற்கான முதற்கட்ட ஆலோசனை நடைபெற்றுள்ளது.

இப்போதைக்கு ‘தமிழ் ஒளி’ என்று தனது சனலுக்கு தலைப்பிட்டுள்ளார்கள். இதே பெயரில் சேனல் உருவாகுமா அல்லது வேறு பெயரில் தொடங்குவார்களா என்பது வரும் காலத்தில் தெரியவரும்.

# ஜம்மு - காஷ்மீர் சந்தைப் பகுதியில் தீவிரவாதிகள் குண்டு தாக்குதல்

## 11 பேர் படுகாயம்

ஜம்மு – காஷ்மீரில் மக்கள் நடமாட்டம் மிகுந்த சந்தைப் பகுதியில் நேற்று தீவிரவாதிகள் சிலர் கையெறி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் பொதுமக்கள் 11 பேர் படுகாயமடைந்தனர்.

ஸ்ரீநகரில் உள்ள சுற்றுலாப் பயணிகள் வரவேற்பு மையம் (டி.ஆர்.சி) அருகே நேற்றுக் காலை இந்த தாக்குதல் நடந்துள்ளது. காயமடைந்தவர்கள் உடனடியாக அருகே உள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் தற்போது நலமுடன் இருக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் அமைந்துள்ள மத்திய ரிசர்வ் பொலிஸ் படை பதுங்குக் குழியை நோக்கி குண்டு வீசப்பட்டதாகவும் எனினும் தீவிரவாதிகள் வைத்த குறி தவறி பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த சண்டே மார்க்கெட் பகுதியில் அந்த கையெறி குண்டு விழுந்து வெடித்ததாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனையடுத்து உடனடியாக இந்த தாக்குதலுக்கு காரணமானவர்களை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.







# காசாவின் வடக்கு பகுதியில் தாக்குதல் 50 இற்கும் மேற்பட்ட சிறார்கள் பலி!

கடந்த இரண்டு நாள்களில் மாத்திரம் காசா வடக்கு பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்ட சிறார்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

நூற்றுக்கணக்கான மக்கள் செறிந்து வாழும் இரண்டு தொடர் மாடிகள் தாக்கப்பட்டதையடுத்தே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கெதரின் ரஸ்ஸல் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், போலியோ தடுப்பூசி வழங்கிக் கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் பணியாளர்கள் சிலரும் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியாளர்கள் பயணித்த கார் தாக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் காயமடைந்ததுள்ளனர்.

இதில் தடுப்பூசி வழங்கும் நிலையத்திற்கு அருகிலிருந்த 3 சிறார்களும் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து, பல தொண்டு நிறுவனங்கள் தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளன.







# எனது வெற்றியின் பின் அமெரிக்கா விடுதலை பெற்ற நாடாக மாறும்

## ட்ரம்ப் தெரிவிப்பு



அமெரிக்க மக்கள் தமது அடுத்த ஜனாதிபதியினை தெரிவு செய்வதற்கு ஒரு நாள் மட்டுமே உள்ள நிலையில், கமலா ஹரிசும் டொனால்ட் ட்ரம்பும் சுவிங் மாநிலத்தில் தமது பிரசார நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்கத் தேர்தலில் அரிசோனா, புளோரிடா, ஜோர்ஜியா மற்றும் அயோவா போன்ற மாநிலங்கள் பெரும் பங்கினை வகிக்கின்றன.

கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தலின் போது இந்த மாவட்டங்கள் போர்க்களமாகக் கருதப்படும் வகையில் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெற்றன.

நாடளாவிய ரீதியாக ஏற்கனவே 7 கோடியே 50 லட்சம் மக்கள் வாக்களித்துள்ளனர்.

இருப்பினும் வாக்களிப்பது குறித்து முடிவு செய்யாத வாக்குகளைப் பெறும் நோக்கில் வேட்பாளர்கள் இருவரும் கவனம் செலுத்துவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், வட கரோலினாவில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றிய டொனால்ட் ட்ரம்ப் 5ஆம் திகதியின் பின்னர் ஆக்கிரமிக்கப்பட்ட நாடாகக் கருதப்படும் அமெரிக்கா, விடுதலை பெற்ற நாடாக மாறும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

### ஊழல்,லஞ்சம், நிர்வாகச் சீர்கேட்டு ஒழிப்பை தெற்கு பார்த்துக் கொள்ளட்டும்

# தமிழரின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



"தென்னிலங்கை நிர்வாகம் சீர்கெட்டிருக்கிறதாம். ஆனால், வடக்கு கிழக்கிற்கென்று முழுமையான நிர்வாகமே இல்லையே. எனவே ஊழல் ஒழிப்பிற்கும் இலஞ்ச ஒழிப்பிற்கும் நிர்வாக ஒழுங்கு முறைக்கும் ஆதரவளிப்பதை தென்னிலங்கை அரசியல் சமூகம் பார்த்துக்கொள்ளட்டும். நாம் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் குரல்கொடுக்கக்கூடிய ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியை சங்கு சின்னத்தில் வாக்களித்து ஆதரிப்போம்."

– இவ்வாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்தும் சண்டிலிப்பாயில் கடந்த 31 ஆம் திகதி நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு வேண்டுகோள் விடுக்கையிலேயே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

இலங்கையில் ஏறத்தாழ முப்பத்தைந்து வருடம் ஓர் உள்நாட்டுப் போர் என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீது ஒரு மூர்க்கத்தனமான இராணுவத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் இராணுவத் தரப்பிலும் போராளிகள் தரப்பிலும் பொதுமக்கள் தரப்பிலுமாக பல இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு வந்தது. ஆகவே கடந்த முப்பத்தைந்து வருட காலத்தில் இந்த நாடு பாரிய அழிவுகளைச் சந்தித்தது மாத்திரமல்லாமல், பாரிய பொருளாதாரப் பின்னடைவுகளையும் சந்தித்தது. அப்பொழுதெல்லாம் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தைக் காரணம் காட்டி ஆட்சியாளர்கள் சிங்கள மக்கள் கிளர்ந்தெழாதவாறு அவர்களின் கைகளையும் வாயையும் கட்டிப்போட்டிருந்தனர்.

இப்பொழுது இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரம் கோடி ரூபா கடன்கள் வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டியுள்ளது. அதே அளவு கடன்கள் உள்நாட்டிலும் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் முன்னர் இருந்த ஆட்சியாளர்களும் சரி, இப்பொழுது வந்திருப்பவர்களும் சரி இந்தப் பொருளாதார பின்னடைவுகளுக்கான சரியான மூலம் எதுவென்பதை வெளியில் சொல்வதற்கு இன்னமும் தயாராகவில்லை.

இப்பொழுது வந்திருக்கக்கூடிய ஜனாதிபதியும் பிரதமரும் தேசிய மக்கள் சக்தி என்றிருக்கக்கூடிய ஜனதா விமுக்தி பெரமுனவின் கூட்டணயில் உள்ளவர்களும் இந்த நாட்டில் ஊழல், இலஞ்சம், நிர்வாக சீர்கேடுகள், வீண்விரயச் செலவுகள் இவைகள்தான் இந்த வங்குரோத்து நிலைக்குக் காரணம் எனக்கூறி உண்மையைப் பூசிமெழுக முற்படுகின்றனர்.

ஊழல், இலஞ்சம், நிர்வாக சீர்கேடுகள் போன்றவற்றிற்கு முழுமையான காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் கடந்த காலங்களில் ஆட்சி செய்த சிங்கள அரசாங்கங்களும் அவர்களின் நம்பிக்கைக்குரிய நிர்வாகிகளும்தான். தமிழ் மக்களுக்கு அரசாட்சியும் கிடையாது. நிர்வாகமும் கிடையாது. வடக்கு-கிழக்கிலுள்ள நிர்வாகங்களும் கொழும்பினாலேயே ஆட்டிப்படைக்கப்படுகின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டுமாக இருந்தால் தமிழ் மக்களின் கைகளில் அதிகாரங்கள் முழுமையாகக் கிடைக்கப்பெற வேண்டும். ஆனால், முன்னைய அரசாங்கங்களும் சரி இப்பொழுது வந்திருப்பவர்களும் சரி, தமிழ் மக்களுக்கான அதிகாரங்களை வழங்குவதில் பின்நிற்கிறார்கள்.

இலங்கையின் பொருளாதாரம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால், தமிழ் மக்களுக்கான ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். எமக்கான ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படுகின்ற பொழுது, புலம்பெயர் தமிழ் மக்களிடமிருந்து பல்லாயிரம் கோட. டொலர் முதலீடுகள் வருவதுடன் எமது அண்டை நாடான இந்தியா, குறிப்பாக தமிழகத்து தொழிலதிபர்களும் கூட இங்கு முதலீடுகளை மேற்கொள்ள முன்வருவார்கள். அதன் மூலம் ஏற்படுகின்ற வடக்கு கிழக்கின் வளர்ச்சி என்பது ஒட்டுமொத்த இலங்கைக்கும் பாரிய நன்மைகளை ஏற்படுத்தும்.

வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும். தொழிற்சாலைகள் அதிகரிக்கும். தொழில்நுட்பக் கல்வி உட்பட கல்விமுறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும். ஆகவே இப்பொழுது பதவியில் இருக்கின்ற ஜனாதிபதியும் வரவிருக்கின்ற புதிய அரசாங்கமும் இவற்றை ஆழமாக ஆலோசித்து தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள முன்வரவேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பாக புதிய அரசாங்கத்துடன் பேசக்கூடிய வல்லமையுள்ள – இவை பற்றி தெளிவான சிந்தனையுள்ள – சரியான உறுப்பினர்களைத் தெரிவுசெய்து நாடாளுமன்றம் அனுப்பவேண்டும். அதற்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை சங்கு சின்னத்தில் வாக்களித்து அதிகளவிலான நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும். – என்று கூறினார்.

# வாகன இலக்கத் தகடு விநியோகம் நிறுத்தம்

வாகன இலக்கத் தகடு விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலக்கத் தகடுகளை அச்சடிக்கும் நிறுவனத்திற்கு பணம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரிய கொடுப்பனவுகளுக்கு உடனடியாக அமைச்சரவையின் அனுமதி பெறப்படவுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.




அடுத்த வாரத்திற்குள் இதற்கான பணிகள் நிறைவடையும் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகன உரிமையாளர்களுக்கு வாகன இலக்கத் தகடு வழங்காமை தொடர்பில் கடிதமொன்று வழங்கப்படுவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

மேற்படி காலப்பகுதியில் தாளில் அச்சிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட வாகன இலக்கத்தை காட்சிப்படுத்துவதற்கு வாகன உரிமையாளர்களுக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# 15 நாடுகளுக்கான தூதுவர்கள் மீள அழைக்கப்பட்டுள்ளனர்

15 நாடுகளுக்கான தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் 15 பேருக்கும் வெளிவிவகார அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார சேவையுடன் தொடர்புபடாத பதவிகளில் பணியாற்றிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் இவ்வாறு மீள அழைக்கப்பட்டுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க ஐக்கிய நாடுகள் சபையின் நிவ்யோர்க்கிற்கான வதிவிட பிரதிநிதி, முன்னாள் பிரதம நீதியரசரான மொஹான் பீரிஸ், பிரித்தானிய உயர்ஸ்தானிகரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம, இந்திய உயர்ஸ்தானிகரான முன்னாள் தூதுவர் ஷெனுகா செனவிரத்ன, அவுஸ்திரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகரான, வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் சித்ராங்கனி வாகீஸ்வர, ஜப்பானுக்கான தூதுவர் ரொட்னி பெரேரா, மலேசியாவிற்கான உயர்ஸ்தானிகரான முன்னாள் விமானப்படை தளபதி சுமங்கல டயஸ், நேபாளத்திற்கான தூதுவர், முன்னாள் விமானப்படை தளபதி சுதர்ஷன பத்திரன, கியூபாவிற்கான தூதுவர், முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதென்ன, பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகர் முன்னாள் கடற்படை தளபதி ரவீந்திர விஜேகுணரத்ன, ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான தூதுவர் உதய இந்திரரத்ன, கென்யாவிற்கான உயர்ஸ்தானிகர் பி.கனநாதன், சீஷெல்ஸ் உயர்ஸ்தானிகர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் மனைவியின் சகோதரரான ஸ்ரீமால் விக்கிரமசிங்க,ஈரானுக்கான தூதுவர் மொஹமட் ஷாஹிட் ஆகியோர் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் விஜித ஹேரத்தின் ஆலோசனையின் பேரில் வெளிநாட்டு சேவைக்கு பொருத்தமானவர்கள் எதிர்காலத்தில் அந்தந்த பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் விஜித ஹேரத் பதிலளித்தார்.

டிசம்பர் முதலாம் திகதியளவில் நாடு திரும்புமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

அத்துடன் வெளிநாட்டு தூதரகங்களிலும் அரசியல் நியமனங்கள் பெற்ற முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் புதல்வர்கள், மகள்மார், சகோதரர்கள் உள்ளிட்ட உறவினர்களும் உள்ளதாகவும் அவர்களையும் ஒரு மாதத்திற்குள் நாடு திரும்புமாறு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிலர் தொடர்பில் குற்றச்சாட்டுகள் காணப்படுவதாகவும் அவை தொடர்பில் ஆராயப்படும் எனவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.



# அதிவேக நெடுஞ்சாலையில் சாரதிகளுக்கு எச்சரிக்கை

அதிவேக வீதியை பயன்படுத்தும் சாரதிகள் மிகக்கவனமாக செயற்பட வேண்டும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை வலியுறுத்தியுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிவேக வீதியில் மணித்தியாலத்திற்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்குமாறும் சாரதிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மழையுடனான வானிலையின் போது அதிக வேகத்தில் பயணிக்க வேண்டாம் எனவும் அதிவேக வீதியின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு முகாமைத்துவப்பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் பி.சி.குணசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.



# 36 மணித்தியாலங்களுக்கு மழையுடனான வானிலை

எதிர்வரும் 36 மணித்தியாலங்களுக்கு மழையுடனான வானிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, மத்திய, வடமத்திய, சபரகமுவ, ஊவா, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என நேற்று இரவு வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.



# மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

நாட்டின் 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பதுளை, காலி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த முதலாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கையும் நீடிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 04.11.2024




வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வதன் மூலம் உங்கள் மனதுக்கு ஒரு மாற்றத்தை அளிக்கலாம். உணர்ச்சிவசப்படுவதை விட யதார்த்தமாக யோசிக்க வேண்டியது அவசியம். அமைதியான மனநிலையில் இருங்கள்.

நீங்கள் உங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளில் தவறுகள் நேராவண்ணம் உங்களை நீங்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

உங்கள் அகந்தை மனப்பாங்கை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம்.

இன்று தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம். எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும். நிதியில் ஸ்திரத்தன்மையை தக்க வைக்க பயனுள்ள யுக்திகளைக் கையாள வேண்டும்.

உங்களுக்கு தொடை மற்றும் கால்வலி பாதிப்பு ஏற்படலாம். தியானப் பயிற்சி மேற்கொள்வது நல்லது.




நீங்கள் உறுதியுடன் இருந்தால் நற்பலன்களைக் காணலாம். வெற்றி பெறுவோம் என்று நம்புங்கள். இறுதியில் வெற்றி உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும்.

உங்களின் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்களிடம் கூடுதல் ஆற்றல் காணப்படும்.அதனை பணியில் வெளிப்படுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நட்போடு பழகுவீர்கள். உண்மையாக இருப்பீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி உருவாகக்கூடிய நல்ல சூழ்நிலை காணப்படும்.

இன்று பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் வைப்பு உள்ளது.

நீங்கள் துடிப்பான மன நிலையுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சினை ஒன்றை கையாள்வதில் கருத்தாய் இருப்பீர்கள். உங்களின் கடின முயற்சி மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்க முயலுங்கள்.

உங்கள் பணியில் இன்று வளர்ச்சி கிடைப்பதற்கு உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் பேசும் போது மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தகவல் பரிமாற்றத்தின் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் நிதியைப் பொறுத்தவரை முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். புதிய முதலீடுகள் செய்வது அல்லது அதற்கான முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல் வலி அல்லது ஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உற்சாகமான நாளாக அமைவது உறுதி. இன்று வெற்றிக்கு உகந்த நாள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் விசேஷம் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். புதிய நண்பர்களின் தொடர்பு கிடைக்கும்.

நீங்கள் இன்று தன்னம்பிக்கையுடன் பணியாற்றுவீர்கள். இன்று கிடைக்கும் புதிய வேலை வாய்ப்பு காரணமாக மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் துணையிடம் அன்புடன் காணப்படுவீர்கள்.

நிதி வளர்ச்சி உயர்ந்து காணப்படும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். புதிய முதலீடுகள் மற்றும் சேமிப்புகள் லாபகரமானதாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக் கொண்டால் இன்று எந்த விதமான ஆரோக்கியப் பிரச்சினையும் வராது.




உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி மூலம் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமைக்கான புகழ் பெறுவீர்கள். உங்களுள் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்.

உங்கள் திடமான முயற்சி மூலம் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம். உங்கள் திறமை மற்றும் தகுது காரணமாக நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உற்சாகமான போக்கை கடைபிடிப்பதன் மூலம் உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை அனுபவிக்கலாம். இதனால் இனிமையும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சேமிப்பும் அதிகமாக காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது. உங்கள் மன உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். அதனால் உங்களால் சிறப்பாக செயலாற்ற இயலாது. உங்கள் செயல்களை சாதரண போக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால் சிறப்பாக பணியாற்ற இயலாது. முறையாக திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக கையாளலாம்.

இன்று உங்களிடம் மன உறுதி குறைந்து காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதும் சேமிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகுவலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்து மூலம் குணமாகும்.




இன்று உங்களுக்கு மிகுதியான வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வாய்ப்பை நீங்கள் நன்கு பயன்படுத்துவீர்கள். இன்றைய தினத்தின் வாய்ப்புகளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணி குறித்து அவர்கள் பெருமை கொள்வார்கள்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் பிரியமானவருடன் நல்லுறவை அமைத்துக் கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று முழுவதும் சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் மன தைரியம் உங்களை சிறப்பாக வைத்திருக்க உதவும்.




இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்க நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். தியானம் அல்லது யோகா போன்றவைகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகளைக் கையாள்வது உங்களுக்கு கடினமாக காணப்படும். அதிகரித்து காணப்படும் பணிச்சுமை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். எனவே கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்று மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைக்கும்.

இன்று பணத்தை முறையாக பயன்படுத்த முடியாது. பணம் விரைவில் கரையும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.11.2024




இன்றைய நாள் ஸ்திரமாக இருக்காது. இன்று மனதில் ஏற்படும் சலனங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றும் ஸ்திரத்தன்மை இன்று குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது. உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் அன்பை வெளிபடுத்த தயங்குவீர்கள். மனதில் குழப்பங்கள் காணப்படும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்றைய பண வரவு உங்களுக்கு திருப்தியை அளிக்காது. பண வரவு இருந்தாலும் அதை உங்களால் தக்க வைத்துக் கொள்ள முடியாது.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று சிறிய முயற்சியில் பெரிய விஷயங்களை சாதிப்பீர்கள்.இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் பங்கு பெற நேரலாம். உங்கள் மேலதிகாரிகள் இந்த சந்திப்பில் நீங்கள் பங்கு பெறும்முறை, உங்கள் கருத்து மற்றும் உங்கள் தகவல் பரிமாற்றம் கண்டு ஈர்க்கப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் நட்புடன் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் கடின உழைப்பு மற்றும் முயற்சி மூலம் இன்று பணவரவு காணப்படும். இன்று புதிய முதலீடுகளை செய்ய இயலும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியத்தை ஸ்திரமாக பராமரிப்பீர்கள்.




உங்களின் தகவல் பரிமாற்றத் திறமையால் வெற்றி காண்பீர்கள். இறை மந்திரங்களை ஜபிப்பதன் மூலமும் ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பதன் மூலமும் திறமையை வளர்த்துக் கொள்ளலாம். இதனால் வளர்ச்சி பெறுவீர்கள்.

உங்கள் பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பின் மூலம் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் குடும்ப விஷயங்களை ஆலோசிப்பீர்கள். முன்பிருந்த அகந்தை மனப்பான்மையை முறியடிப்பீர்கள்.

நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். ஆன்மீக காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

நீங்கள் துடிப்புடன் காணப்படுவீர்கள்.




இன்று பதற்றப்படாமல் சமநிலையோடு இருங்கள். உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை நம்பிக்கையோடு சமாளிக்க வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக உங்களால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. இன்று நீங்கள் சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினை காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனைப் போக்க மனம் திறந்து பேச வேண்டும். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று பணம் சம்பாதிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அதிக செலவுகள் காணப்படும்.



Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.



Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park